செ.வெ.எண்: 764/ 2016 நாள்: 27.10.2016

# பத்திரிக்கை செய்தி

## கன்னியாகுமரி மாவட்டத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் 6 குழந்தைகள் காப்பக பணியாளர்கள் (ம) 8 குழந்தைகள் காப்பக சமையலர்/உதவியாளர்கள் காலிப்பணியிடங்களுக்கு 15.11.2016 பிற்பகல் 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன் சிங் ர.சவான் இ.ஆ.ப அவர்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள அங்கன்வாடி மையத்தோடு இணைந்த 6 குழந்தைகள் காப்பக பணியாளர்களுக்கு ரூ.3000 /- (ம) 8 குழந்தைகள் காப்பக சமையலர்/உதவியாளர்கள் பணியிடங்களுக்கு ரூ. 1500/- என்ற தொகுப்பூதிய அடிப்படையில் புதிதாக ஆட்களை தேர்வு செய்ய 15.11.2016 பிற்பகல் 5.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ர.சவான், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள அங்கன்வாடி மையத்தோடு இணைந்த 6 குழந்தைகள் காப்பக பணியாளர்கள் (ம) 8 குழந்தைகள் காப்பக சமையலர்/உதவியாளர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் மனுதாரர்கள் சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் அரசு வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளப்படும். மாதிரி விண்ணப்ப படிவம் மற்றும் இனசுழற்சிமுறை விபரம் மாவட்ட திட்ட அலுவலகம் நாகர்கோவில், சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலக விளம்பர பலகைகளில் ஒட்டப்பட்டுள்ளது. நேர்முகத்தேர்வு 18.11.2016 காலை 10 மணி முதல் 1 மணி வரை குழந்தைகள் காப்பக பணியாளர் பதவிக்கும், மாலை 2 மணி முதல் 5 மணி வரை சமையலர்/உதவியாளர் பதவிக்கும் மாவட்ட திட்ட அலுவலகம், பழைய அகஸ்தீஸ்வரம் தாலுகா அலுவலக வளாகம், (புனித ஜோசப் கான்வென்ட் மகளிர் மேல்நிலை பள்ளி அருகில்), நாகர்கோவிலில் வைத்து நடத்தப்படும்.

### பொதுவான நிபந்தனைகள்

1.விண்ணப்பதாரர் காலிபணியிடம் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களில் வசிப்பவராகவும், நகராட்சி பகுதிகளில் காலிபணியிடம் உள்ள பகுதி (வார்டு) அல்லது அருகில் உள்ள பகுதி (வார்டு) வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்

2.திருமணமான மகளிராக இருக்க வேண்டும். விதவை/ ஆதரவற்ற விதவை /கணவரால் கைவிடப்பட்டவர்/ ஊனமுற்றவர்களுக்கு உரிய வகையில் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.தாவ/தாப/மிபிவ/பிவ என்பதற்கான சான்று வட்டாட்சியமிருந்து பெற்று சமர்ப்பிக்கவேண்டும்.

4 குடும்ப அட்டை (அ) தேர்தல் அடையாள அட்டை (அ) வரி ரெசீது போன்றவற்றின் ஏதாவது ஒருநகல் இணைக்கப்பட வேண்டும்

## தகுதிகள்

### குழந்தைகள் காப்பக பணியாளர் - சம்பளம் தொகுப்பு ஊதியம் Rs.3000/-

- பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- 1.2.2016 -ல் வயது 25 முதல் 35-க்குள் இருக்க வெண்டும் (விதவை மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு 40 வயது வரை, ஊனமுற்றோருக்கு 38 வயது வரை, மலைவாழ் விண்ணப்பதாரர்களுக்கு வயது 20 லிருந்து 40 வயது வரை)

### குழந்தைகள் காப்பக சமையலர்/உதவியாளர் -சம்பளம் தொகுப்பு ஊதியம் Rs.1500/-

- எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
- 01.02.2016-ல் வயது 20-40-க்குள் இருக்க வேண்டும் (விதவை மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு (20-45-க்குள்), ஊனமுற்றோருக்கு 43 வயது வரை, மலைவாழ் விண்ணப்பதாரர்களுக்கு வயது 20 லிருந்து 45 வயது வரை )

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.